


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், திங்கள்நகர், கால்நடை மருந்தகத்தில் உலர்தீவன கிட்டங்கியை தொடங்கி வைத்து, கால்நடை வளர்ப்போர்களுக்கு மானிய விலையில் தீவனத்தை இன்று (15.03.2017) வழங்கினார்.

செ.வெ.எண்: 191/2017 நாள்: 15.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், திங்கள்நகர், கால்நடை மருந்தகத்தில் உலர்தீவன கிட்டங்கியை தொடங்கி வைத்து, கால்நடை வளர்ப்போர்களுக்கு மானிய விலையில் தீவனத்தை இன்று (15.03.2017) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், திங்கள்நகர், கால்நடை மருந்தகத்தில் உலர்தீவன கிட்டங்கியை தொடங்கி வைத்து, கால்நடை வளர்ப்போர்களுக்கு மானிய விலையில் தீவனத்தை இன்று (15.03.2017) வழங்கி, தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததை அடுத்து, வரும் வறட்சியை எதிர்கொள்ள, மாநில அரசு உலர்தீவன கிட்டங்கி அமைத்தல், பசுந்தீவன புல் வளர்த்தல் மற்றும் தாது உப்புக்கலவை மானிய விலையில் வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை கால்நடைகளின் நலன் கருதி தமிழக அரசு எடுத்து வருகிறது.

அதில் ஒரு பகுதியாக நமது மாவட்டத்தில் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ், தோவாளை, அழகப்பபுரம், திங்கள்நகர், செம்மங்கலா ஆகிய கால்நடை மருந்தகங்களில் உலர் தீவன கிட்டங்கிகள் ரூ.73.08 இலட்சத்தில் நிறுவப்பட உள்ளது. வறட்சி நிலை சீராகும் வரை ஒரு கால்நடைக்கு தினம் 3 கிலோ வீதம் அதிகபட்சம் 5 கால்நடைகளுக்கு ஒரு வாரத்திற்கு 105 கிலோ வரை விவசாயி ஒருவருக்கு உலர் தீவனம் மானிய விலையில் கிலோ ஒன்றுக்கு ரூ. 2/- வீதம் வழங்கப்படுகிறது.

இதன் தொடக்க விழாவாக, இன்று திங்கள் நகர் கால்நடை மருந்தகத்தில் உலர்தீவன கிட்டங்கி தொடங்கி வைக்கப்பட்டது. இதில் கால்நடை வளர்ப்போர் சுமார் 600-க்கும் மேற்பட்டோர், தங்களது பெயர்களை பதிவு செய்து, மானிய விலையில் தீவனம் பெற்று பயன்பெற்றனர். மேலும், இத்திட்டத்தின் மூலம் சுமார் 3,000-த்திற்கும் மேற்பட்ட கால்நடை வளர்ப்போர்கள் பயன்பெறுவர்கள். கால்நடை வளர்ப்போர்கள், தங்களது குடும்ப அட்டை மற்றும் ஆதார அட்டையுடன் உலர் தீவனக் கிடங்கு அமைந்துள்ள கால்நடை மருந்தகங்களில் உள்ள உதவி மருத்துவரை அணுகி, முழுவதுமாக பயன்பெற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மண்டல இணை இயக்குநர் மரு. பின்டன் மிசியர், வல்லுநர் மரு. சி.ஜெயபால், உதவி இயக்குநர்கள் மரு. கொ.ஆறுமுகப்பெருமாள், மரு. இரா.ரிச்சர்டுராஜ், கால் நடை உதவி மருத்துவர் மரு. அனிஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.